DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 75/2024** |
| Deposition of Witness for | : | PW 4 |
| Name | : | திருமதி. சங்கரி (மருத்துவர்) |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 18.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th September 2025.

**1ம் எதிரி ஆஜர். 2,5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்தபோது 06.12.2013 அன்று பணியில் இருந்தபோது மதியம் 2.30 மணியளவில் 50 வயது மதிக்கத்தக்க கடலாட்சி என்பவர் தன்னை தனக்கு தெரிந்த 6 நபர்கள் கம்பு கொண்டு 06.12.2013ம் தேதி காலை 11.00 மணிக்கு அவரது தோப்பில் உள்ள கிணற்றருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது இதயத்துடிப்பு மற்றும் சுவாசம் சீராக இருந்தது. அவரை பரிசோதித்தபோது அவருக்கு பின்வரும் காயங்கள் அவருக்கு ஏற்பட்டிருந்தன.

1. 3x1x0.5 செமீ அளவிலான வெட்டுக்காயம்– தலையில் முன் நெற்றிக்கு மேல் தலையின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

2. 3x2 செமீ அளவிலான சிராய்ப்பு காயம் – இடது காலில் காணப்பட்டது.

3. வலது தோள்பட்டையில் வலி இருப்பதாக கூறினார்.

அவரை மேல்சிகிச்சைக்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று அளித்தேன். **கடலாட்சி என்பவரது விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

கடலாட்சிக்கு இடுப்பில் காயம் இருப்பதாக கூறினாரா என்றால் கூறவில்லை. கடலாட்சிக்கு காயம்பட்டு ரத்தம் வடிந்துகொண்டிருந்த நிலையில் அவர் சிகிச்சைக்கு வந்தாரா என்றால் அவர் சிகிச்சைக்கு வரும்போது அவரது காயங்களில் ரத்தம் வடிந்துகொண்டிருந்தது. கடலாட்சிக்கு ஏற்பட்ட காயங்களில் ரத்தம் வடிந்துகொண்டிருந்தது என்று காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கடலாட்சிக்கு ஏற்பட்டமேற்படி காயங்கள் அவர் கரடுமுரடான தரையில் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. 6 நபர்கள் சேர்ந்து ஒரு நபரை அடிக்கும்போது 2 க்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் 6 நபர்கள் எந்த ஆயுதத்தை கொண்டு தாக்குகிறார்கள், எந்த இடங்களில் காயம் ஏற்படுத்துகிறார்கள் என்பதை பொறுத்து காயங்களின் எண்ணிக்கை மாறுபடலாம். 6 நபர்கள் கம்பால் அடிக்கும்போது வெட்டுக்காயம் ஏற்படுமா அல்லது சிராய்ப்பு காயம் ஏற்படுமா என்றால் வெட்டுக்காயம் ஏற்படும்.

**மறுவிசாரணை இல்லை.**